BTA
BERGEN TAMILSK AVIS
தேன்தமிழிதழ்
Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.
Org.nr: 926 840 320 - ISSN 2703-8440



Bergen Tamilsk Avis - no.13 - February 2022 - தேன் தமிழிதழ் - மாத இதழ் - இல.13 மாசி 2022

*வணக்கம்!*

*தடிமன், இருமல் போன்ற நோய்களின் சமநிலையில் கொரோனா தொற்று நோயும் தற்போது கணிக்கப்படுகிறது. கொரோனா நோய்த் தாக்கம் உடையோர் எந்தவித கட்டுப்பாடுகளுமற்ற சாதாரண பணி வாழ்வினை மேற்கொள்ளலாம் என நோர்வே அரசு அறிவித்துள்ளது. இதனை அடுத்து தொற்று நோய் பற்றி எந்தவித அச்சமும் மக்களிடம் காணப்படுவதாகவில்லை. இந்நிலை தொடரப் போகிறதா தொடருமாயின் அதனது விளைவுகள் எதிர்காலத்தில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பது பெரும் கேள்விக்குறியாக உள்ளது. தொற்று ஆரம்பமான காலத்திலிருந்து உலக நாடுகள் எல்லாம் பொருளாதார நெருக்கடிகளுக்கு பெரிதும் தள்ளப்பட்டுள்ளன. இதுவே இந்த கட்டுப்பாட்டு விதிகளை தளர்த்தியமைக்கு முக்கிய காரணம் என கூறப்படுகிறது. இருப்பினும் அரசினுடைய இம்முடிவுக்கு தேசிய சுகாதார அலுவலகம் உடன்பட்டதா என்பது இங்கு கேள்விக்குறியே?*

*கடந்த 2020 மார்ச் மாதத்திலிருந்து மக்கள் முடக்கப்பட்ட வாழ்விலிருந்து வெளியே வந்து தூய காற்றினை சுவாசிப்பதற்கும், சாதாரண இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கும் நோர்வே அரசு தமது நாட்டு மக்களுக்கு கதவுகளினைத் திறந்தமை மக்கள் மத்தியில் இனம் புரியா மகிழ்வினைக் கொடுத்துள்ளது என்பதே உண்மை.*

*ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு (யுனெஸ்கோ) பிப்ரவரி 11ஆம் நாளினை சர்வதேச தமிழ்மொழி தினமாக அறிவித்துள்ளது. இத்தினம் உலகம் பூராகவும் தமிழ்மொழி தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.*

*உலக மாந்தர்களால் பேசப்படும் பல ஆயிரக்கணக்கான மொழிகள் தமிழ் மொழிக்கென தனித்தன்மை உண்டு. ஆழமான தொன்மை வாய்ந்த இலக்கியச் சிறப்பினை தன்னகத்தே கொண்டது. தமிழ் மொழியை கிட்டத்தட்ட ஏழு கோடி மக்கள் பேசுகின்றனர். 94 நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவற்றுள் நோர்வே போன்ற ஐரோப்பிய நாடுகள் பலவும் அடங்குகின்றன. தாய் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து மேலை நாடுகளுக்கு வந்து நிரந்தரமாக இந்த நாட்டுடனும், மக்களுடனும் இசைவாக்கம் அடைந்து நாட்டு மொழியினை நன்கு கற்று ஒன்றாகக் கலந்து வாழ்ந்தாலும், நமது அடையாளமான தாய்மொழியை அழிய விடாது பாதுகாத்து, நமக்கு அடுத்த சந்ததியினரான நமது குழந்தைகளுக்கும் கொடுத்தல் நமது பெரும் பொறுப்பாகும். தமிழ் மொழியினை நமது அடுத்த சந்ததியினருக்கு கடத்தவும், அவர்கள் தமிழில் பேசவும், எழுதவும், அதன் இலக்கிய சிறப்பினையும் இனிமையையும் அறிந்திடவும் புலம்பெயர் நாடுகளில் பலர் உழைத்து வருகிறார்கள். இப்பணியில் சிரத்தையோடு தோண்டாற்றிவரும் தமிழ் அறிஞர்கள், மொழி ஆசிரியர்கள், மொழி ஆளுமையாளர்கள், சமூகத் தொண்டர்கள் என பலரும் பல வழிகளிலும் துடிப்புடன் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவருமே போற்றுதலுக்கு உரியவர்கள். இவர்களுக்கு தேன்தமிழ் இதழ் தலை வணங்குகிறது.*

*கடந்த 2021 மாசி 21ம் நாளிலேயே நமது தேன் தமிழ் இதழ் மாத இதழின் பிறந்த நாளாகும். நமது முதல் பத்திரிகை இணைய வாயிலாக வெளியாகிய தினமாகும்.*

## குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 2022

சீனாவின் தலைநகர் Beijing எனுமிடத்தில் குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.




*24வது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் பெய்ஜிங்கில் 4-20 மாசி 2022 வரை நடைபெற்றது.*

*நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டிகளில் நோர்வே 16 தங்கம், 8 வெள்ளி, 13 வெண்கலம் ஆகிய 37 பதக்கங்களை பெற்று முதலிடத்தை தனதாக்கிக் கொண்டுள்ளது.*

*அது மட்டுமல்லாது 16 தங்கப் பதக்கங்களை வென்று சரித்திர சாதனை புரிந்துள்ளது.*

*ஜெர்மனி 27 பதக்கங்களை வென்று இரண்டாம் இடத்தை எட்டிப் பிடித்துள்ளது.*

*கடந்த 2018ம் ஆண்டிலே தென் கொரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் நோர்வே 14 தங்கப் பதக்கங்கள் உட்பட, 39 பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.*

*கொரோனா தொற்றுநோயின் தாக்கம் நோர்வேயின் பயிற்சியாளர்கள் மற்றும் வீரர்களைத் தாக்கிய சவால்கள் இருந்த போதும், தமது வெற்றி இலக்கை அடைந்தமை பாராட்டுதற்குரியதே.*

”Nordmenn er født med ski på beina”

NRT
Norway Radio Tamil
தேன் தமிழ் ஓசை
30வருடகால ஊடகப்பணி




வாசகர்கள் தேன் தமிழிதழ் சந்தா செலுத்த.... வங்கிக் கணக்கு.

Bergen tamilsk avis
3626 31 78585
Vips: 729129

வருடம் 12மின் இதழ்கள் 200குரோணர்கள்.
அச்சுப்பிரதி- 300குரோணர்கள் தபால்செலவு உட்பட (நோர்வே).
மேலதிக விபரங்களுக்கு: யூலியஸ்
தொலைபேசி எண்: (47) 924 63 674

# நோர்வே அரசின் கொரோனா தொடர்பான பரிந்துரைகள்




*சுவாச மற்றும் கொரோனா நோய்க்கான அறிகுறிகள் ஏற்பட்டாலோ கொரோனா நோய்த்தொற்று நிரூபிக்கப்பட்டாலோ தனிமைப்படுத்துவதற்கான சட்டப்பூர்வ தேவையை அரசாங்கம் நீக்கியுள்ளது. ஆனால் நோய்த்தொற்று நிரூபிக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான பரிந்துரைகளை தொடர்ந்து அரசு அறிவுறுத்தி வருகிறது.*

**கொரோனா நோய்த்தொற்று அறிகுறிகள் ஏற்பட்டால்:-**

*நோய்க்கான அறிகுறிகளைக் கொண்ட பெரியவர்கள் சுய பரிசோதனை* (selv test) *செய்து கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு பரிசோதனை செய்ய வேண்டிய அவசியமில்லை.*

*நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், நலம் பெறும்வரை வீட்டிலேயே இருங்கள், 24 மணிநேரம் காய்ச்சல் இல்லாமல் இருக்கிறீர்களா என அவதானித்துக் கொள்ளுங்கள். இது பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் இருவருக்கும் பொருந்தும். தடிமன், குறட்டை, தொண்டை கரகரப்பு மற்றும் இலேசான இருமல் போன்ற அறிகுறிகளை நீங்கள் ஓரளவு இலகுவாக எடுத்துக் கொள்ளலாம்.*

**கோவிட்-19க்கு நேர்மறை சோதனை** (Positiv) **தோன்றினால்:**


*உங்கள் நகரசபை இணைய தளத்தின் ஊடாக பதிவு செய்துகொள்ளுங்கள்.*
(Selvregistrering av koronatester og nærkontakter)
*அத்துடன் அறிகுறிகள் தோன்றியதிலிருந்து அல்லது உங்களுக்கு அறிகுறிகள் இல்லாவிட்டால் நேர்மறை சோதனை* (Positiv) *கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து நீங்கள் வீட்டிலேயே இருத்தல் நல்லது. இந்தப் படிவத்தில் நேர்மறையான பதிலைப் பதிவுசெய்து, நீங்கள் பாதிக்கப்பட்டுள்ளதை உங்கள் நெருங்கிய தொடர்புகளுக்குத் தெரிவிக்கவும். வேலைக்குத் திரும்புவதற்கு முன் 24 மணிநேரம் காய்ச்சல் இல்லாமல் இருக்க வேண்டும். நெருங்கிய தொடர்புகளுக்கு அறிகுறிகள் இல்லாவிட்டால் அவர்கள் பரிசோதிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டிய அவசியமுமில்லை.*

**நான்காவது தடுப்பூசி**

*இது ஒருவகையான புத்துணர்ச்சி ஊசியாகும்.*
*கொரோனா தடுப்பூசிகளின் எதிர்ப்பு சக்தி சிறிது காலத்துள் குறைந்து விடலாம். அதனாலேயே முதன்மை தடுப்பூசிகளினை முறையே பெற்றுக்கொண்ட பலருக்கு கொரோனா நோய் தொற்று ஏற்படுகிறது.*
*புத்துணர்ச்சியூட்டும் நான்காவது ஊசியினை எடுத்துக்கொள்வது அதிக நீண்ட கால பாதுகாப்பை வழங்குகிறது. மற்றும் வைரஸின் புதிய மாறுபாடுகளுக்கு எதிராக நம்மை சிறந்த முறையில் தயார்படுத்தும் பரந்த பாதுகாப்பையும் வழங்குகிறது.*
*டோஸ் 2 மற்றும் புதுப்பிப்பு டோஸ் இடையே இடைவெளி குறைந்தது 20 வாரங்கள் இருக்க வேண்டும்.*
*45 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் முதியோர் இல்லத்தில் வசிப்பவர்கள் அனைவருக்கும் நான்காம் டோஸ் பரிந்துரைக்கப்படுகிறது.*
*ஆபத்துக் குழுக்களைச் சேர்ந்த 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு, சுகாதாரம் மற்றும் பராமரிப்பு சேவையில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும், நான்காம் டோஸ் பரிந்துரைக்கப்படுகிறது.*

# பூம்பனிப்பனை - Lokalhistoriewiki.no






ஒசுலோவில் குளிர்கால விடுமுறை 2022 இல் விக்கி பட்டறை Lokalhistoriewiki.no இல் உள்ள "பூம்பனிப்பனை"யின் செயல் குழு, விக்கிப் பட்டறையினை கடந்த மாசி 22 மற்றும் 24ம் நாள்களில் முன்னெடுத்தனர்.

2022 குளிர்கால விடுமுறையில், தமிழ்-நோர்வேயியர்களின் கதைகளை இன்றைய மற்றும் வருங்கால சந்ததியினருக்குச் சொல்வதற்காக எழுதுதல் என்பதை ஒரு கருவியாகவும், முறைமையாகவும் நோர்வே வாழ் தமிழ் இளைஞர்கள் எடுத்துள்ளனர்.




அவர்கள் தமது சமூக மற்றும் கற்றல் திறன்களை வளர்த்துக் கொள்வதுடன், தாம் எழுதும் பதிவுகள் யார் வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் மீட்டெடுக்கும் தளத்தில் பதிவு செய்து வருகின்றனர்.

ஒசுலோவில், அதனை சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வாழும் இளையோர் விக்கி பட்டறையில் பங்கு பற்றியுள்ளனர்.

எதிர்கால விக்கிப் பட்டறைகளில், நோர்வே வாழ் தமிழர்களைப் பற்றி நோர்வேயிய மொழியில் எழுதக்கூடிய அனைவரையும் இத்திட்டத்தின் செயல் குழு வரவேற்கிறது. அது வயது, தலைமுறை என்ற வேறுபாடின்றி அனைவரையும் வரவேற்கிறது.

Lokalhistoriewiki.no இல் எங்கள் இருப்பின் கதைகளைச் சொல்லுங்கள். நோர்வே வாழ் தமிழர்களின் புலம்பெயர் வரலாற்றை நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினர் எவரும் எந்த நேரத்திலும் மீட்டெடுக்கக் கூடிய விதத்தில் பாதுகாக்கவும், பரப்பவும் பங்களியுங்கள். □



# இலங்கையில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வியல் - பாகம் 05



**-ப்ரியமதா பயஸ்-**

இலங்கை சுதந்திரம் அடைந்த கலாம் தொடக்கம் இன்றுவரை இலங்கையில் மக்கள் நிம்மதியாக சுதந்திரமாக வாழ்ந்தார்களா? என்று கேட்டால் முற்றும் முழுதாக ஆம் என்று பதில் சொல்லிவிட முடியாது. காலத்துக்கு காலம் இலங்கை மக்களின் வாழ்வியல் மிக மோசமான நிலைமைக்கு தள்ளப்படுவதும் சற்று மீள்வதும் அடக்குமுறைக்கு உட்படுவதும் ஒடுக்கப்படுவதும் என தளம்பலான வாழ்வியலே காணப்படுகின்றது.

இலங்கையில் படித்தவர்களின் பலர் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள் புலம்பெயர்ந்துபோனமைக்கும் அடக்குமுறை நிலைமை ஒரு காரணமாகவே இருக்கின்றது.

இந்த அத்தனை தன்மைகளும் காலம்காலமாக இலங்கை பெண்களின் வாழ்வியலில் நீண்ட கறை படிந்த கோடு ஒன்றை கீறிக்கொண்டே வருகின்றது, அந்தக்கோடு இன்றையகாலகட்டத்தில் மிக நீண்டதாக மிக கொடியதாக இருப்பது மிக வேதனையானது - இலங்கையில் யுத்தம் நடந்த காலத்தில் விதவைகளாக்கப்பட்ட பெண்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் மனைவிமார் என அநாதரவான நிலையில் தம் குடும்பங்களை தாங்களே தாங்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை மிக அதிகமானது - அதை விட விபத்துக்கள், இயற்கை அனர்த்தங்கள், நோய்வாய்ப்பட்டு இறத்தல் போன்ற வலிகளால் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களின் பெண்கள் தமது குடும்பசுமையை தங்களின் தோள்களில் தாங்கி வாழ்வது இன்னொரு பக்கம் - இவை உலகளவில் உள்ள பிரச்சனைதானே என பலர் கேள்வி கேட்கலாம் - ஆனால் உலகளவில் இருக்கும் இத்தகைய பெண்களுக்கான அரச பாதுகாப்பு உதவிகள், நலத்திட்டங்கள், உணவு, உடை, உறையுள், மருத்துவம், குழந்தைகளின் கல்விச்செலவு என்பன வேறு விதம். ஆனால் இலங்கையை பொறுத்தவரை இலங்கையின் சமூக சேவை கட்டமைப்பு முற்றிலும் மாறுபட்டது இப்படியான பெண்களுக்கான உதவி நலத்திட்டங்கள் மிக குறைவு நலிவுற்றோருக்கான உதவித்திட்டங்களில் இப்படியானவர்களுக்கு முன்னுரிமை என பேசப்பட்டாலும் கிடைப்பது மிக அரிது- உதாரணமாக:- இலங்கையில் இருக்கின்ற சமுர்த்தி உதவி நல திடடத்தில் வறுமைக்கோட்டுக்குள் வாழும் குடும்பங்களுக்கு மாதாந்த சமுர்த்தி உதவிப்பணம் மற்றும், சுயதொழில் உதவிகள், என அரசின் திடத்தில் இருந்தாலும், என் கணவனை இழந்த 10 வருடங்களின் பின்னரே எனக்கு அந்த உதவியை பெறக்கூடியதாக இருந்தது சமுர்த்தி அலுவலர்களின் அக்கறை அற்ற செயற்பாடுகள், பொறுப்பற்ற நிலைமை. யாராக இருந்தாலும் அவர்களை தேடி சென்றே உதவிகளைப்பெறவேண்டும்,

அதற்காக காத்திருக்கவேண்டும் என்கின்ற கட்டாய சூழ்நிலைகள் என்பன இலங்கையில் இருக்கின்றன - மற்றைய நாடுகளில் ஒரு கிராமத்தில் எத்தனை துணையிழந்த பெண்கள் இருக்கின்றனர், எத்தனை வயோதிபர்கள் இருக்கின்றனர், எத்தனை ஊனமுற்றவர்கள் இருக்கின்றனர் என்கின்ற தகவல்கள் நாளாந்தம் முக்கியப்படுத்தப்பட்ட தரவு சேகரிப்பாக இருக்கின்றது. ஆனால் இலங்கையில் அந்த நிலைமை முற்றிலும் மாறுபட்டது. 2009இல் என் கணவனைப் பறிகொடுத்தபின் என் அரச பதிவு நான் வசிக்கும் என் கிராமத்திலேயே இருக்கின்றது. ஆனால் நான் போரால் பாதிக்கப்பட்டவள், கணவனை இழந்தவள், குழந்தை ஒன்றை பராமரிக்கும் நிலையில் இருப்பவள் என்கின்ற தேவைப்பாடுடைய கணக்கெடுப்பு முறையாக இல்லாமையால் அல்லது அசமந்தப்போக்கால் நான் நிரந்தரமாக என் கிராமத்தில் இருந்தும் கவனிக்கப்படாத சூழ்நிலையால் சமுர்த்தி உதவியை அண்மைய சில வருடமாகவே நான் பெறமுடிந்தது. வாழ்வாதார உதவிகளை அரசு வழங்கினாலும் நம்போன்றவர்களுக்கு அவற்றை முக்கியப்படுத்தி வழங்க முன்வராத அரச அலுவலர்கள் இருப்பது மிக துர்பாக்கியமான நிலைமை.

முதலில் இப்படியானவர்களுக்கு அரசு வழங்கும் சொற்பமான உதவிகளாவது முன்னுரிமை அடிப்படையில் இந்த பெண்களுக்கு வழங்கப்படவேண்டியது மிக கட்டாயமானது என்கின்ற சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். இவற்றை அரச முக்கிய தலைமைகள் கண்காணிக்கவேண்டும்.

ஒரு சமூகத்தில் இருக்கும் பாதிக்கப்பட்ட பெண்கள் அதாவது தாமே குடும்பங்களை தலைமை தாங்குபவர்களாக இருப்பவர்கள் மிக பாதுகாப்புடன் கவனிக்கப்படவேண்டியவர்கள் - உலகளவில் எத்தனை விடயங்கள் நடந்து முடிந்தாலும், இயற்கையான மனித படைப்பில் சில சிறப்பியல்புகளையும் சில பலவீனககளையும் கொண்ட பெண்கள் சில விடயங்களை நேர்த்தியாக செய்வதற்கு முடிந்து விடுவதில்லை.

பெண்கள்உலகளவில் பல சாதனைகளை செய்தாலும் சமூக மடத்தில் கல்விமட்டம் மற்றும் அறிவு மட்டம் என்பவற்றில் குறைந்தளவில் இருக்கும் பெண்கள் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவர்களாகவே இருக்கின்றனர்.

இலங்கையில் நடந்த படுகொலைகளில் பெரும்பாலும் ஆண்கள் வலுக்கட்டாயமாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நம்பி இருந்த குடும்ப பெண்கள் சடுதியாக நிர்கதியான சூழ்நிலைக்கு தள்ளப்படும்போது மனதளவிலும் அவர்கள் மிக மோசமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இலங்கையில் நடந்த பல கூட்டு படுகொலைகளில் பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களை சென்று சந்திக்கும்போது அவர்கள் மிக மோசமாக மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய வெளிநாடுகளைப்போன்ற சமூக வாழ்வியல் கட்டமைப்பு எமது நாட்டில் இல்லை எமது நாடு ஒரு பாரம்பரிய வாழ்வியல் கட்டமைப்புடன் இருக்கும் சமூகத்தை கொண்ட நாடு ஆகையால் இந்த வாழ்வியல் சமூக நெருக்கடிக்குள் இந்த பெண்கள் படும் அவலம் சொல்லில் அடங்காதவை....

(தொடரும் )

## நூல் அறிமுகம்
## வீட்டு எண் 38/465




**"வீட்டு எண் 38/465"**
**ஒஸ்லோ கவிதா லட்சுமியின்**
**12 கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு.**

இலக்கியம் மற்றும் ஆடற்கலை என பல தளங்களில் இயங்கிவருபவர் கவிதா. கடந்த இருபது ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பல்வேறு அரங்கப் படைப்புகளை உருவாக்கி வருபவர்.
தமிழ் இலக்கியத்திலிருந்து, பேசுபொருளைக் கையாண்டு புத்தாக்க முயற்சிகளோடு படைப்புகளைத் தந்துகொண்டிருப்பவர். சமகாலச் சமூகப் பிரதிபலிப்புகளுடன் நடன-நாடகப் படைப்புகளை உருவாக்கி வருபவர்.
இதுவரை இவரது 6 கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. "கருவறைக்கு வெளியே" எனும் தலைப்பில் ஒரு கதைத் தொகுப்பும் 2015இல் வெளிவந்தது. இது கவிதாவின் 8வது நூல்.

இந்த நூலிலுள்ள பன்னிரெண்டு கட்டுரைகளில் அவரது கலை இலக்கிய அக்கறைகளை வளமான மொழியாடல் மூலம் வெளிப்படுத்துகின்றார்.
எளிமையான நடையில் தீர்க்கமான கருத்துக்களை முன் வைக்கின்றார். தமிழ்நாட்டு சிறுபத்திரிக்கை தமிழ்நடைக்கு பரிச்சயமான நமக்கு, மேடையில் வீசும் ஒரு மெல்லிய பூங்காற்று போல் ஈழத்தமிழ் வருகின்றது. துல்லியமான சொற் பயன்பாடும் தெளிந்த நடையோட்டமும் நம்மை ஈர்க்கின்றது.

-தியடோர் பாஸ்கரன் India

# உக்ரைன் - ரஷ்யா மோதல் - அதிரும் உலகு




பொருளாதாரத்தில் வளரும் நாடுகளில் ஒன்று உக்ரைன். மனித ஆற்றல் வளர்ச்சியில் உக்ரைன் உலகத்தில் 74-ஆவது இடத்தில் இருக்கிறது.

வறுமையும் ஊழலும் இங்கு அதிகம். வளமான விவசாய நிலம் இருப்பதால் விவசாய பொருட்களை ஏற்றுமதி செய்வதில் முக்கியமான நாடாக உக்ரைன் இருக்கிறது.

இராணுவ பலத்தில் ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக இருக்கிறது. உக்ரைன் ஒரு குடியரசு நாடு, ஜனாதிபதி தலைமையிலான ஒற்றை ஆட்சி முறை இங்கு நிலவுகிறது.

நீதித்துறை, அரச நிர்வாகத் துறை, சட்டமியற்றும் நாடாளுமன்றம் ஆகிய மூன்று முக்கிய உறுப்புகளைக் கொண்டிருக்கிறது. ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியும் பிரதமராக டெனிஸ் ஷைமிஹாலும் பதவியில் உள்ளனர்.

இப்போது உக்ரைன் - ரஷ்யா மோதல் உச்சகட்டத்தை அடைந்துள்ளது. உக்ரைன் தலைநகர் கீவ் நகரை தற்போது ரஷ்ய ராணுவம் தனது டாங்கிகளைக் கொண்டு சுற்றி வளைத்துள்ளது. தங்கள் போர் உக்ரைன் இராணுவத்துடன்தானே ஒழிய பொதுமக்களிடம் அல்ல என்றும் பொது சொத்துக்களுக்கும் உக்ரைன் குடிமக்களுக்கும் சேதம் விளைவிக்க மாட்டோம் என்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் முன்னர் அறிவித்திருந்தார்.

தற்போது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை தாக்குதலில் ஈடுபட்டு ரஷ்யா இராணுவ முகாம்களை குறிவைத்து தாக்கி வருகிறது. இந்த நிலையில் கிவ் நகரின் மையப்பகுதியில் உள்ள ஓர் அடுக்குமாடி குடியிருப்பில் ரஷ்ய ஏவுகணை தாக்கியுள்ளது.

இந்த ஏவுகணை தாக்குதலில் அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஐந்து அடுக்குகள் சேதமடைந்துள்ளன. இதுகுறித்து அந்த நகரத்தின் மேயர் விட்டாலே கிளாஸ்கோ அதிகாரப்பூர்வ தகவல் வெளியிட்டுள்ளார். வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்ட அவர் நேற்று இரவு இந்த தாக்குதல் நடந்ததாகவும் இதனால் பலர் அச்சுறுத்தலுக்கு உள்ளானதாகவும் தெரிவித்துள்ளார்.

*தற்போது அண்டை நாடுகள் உக்ரைன் இராணுவத்திற்கு மறைமுகமாக உதவிகள் செய்து வருகின்றன. நேட்டோ நாடுகள், அமெரிக்கா, கனடா உள்ளிட்டவை ஆயுத உதவி , நிதி உதவி ஆகியவற்றை வழங்கி வருகின்றன.*

*இதனைத் தொடர்ந்து தற்போது நெதர்லாந்து 200 ரொக்கெட்டுகளை வழங்க உள்ளது. இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. பதுங்குகுழிகளை கண்டறியும் தானியங்கி ரோபோக்கள், ரேடார் கருவிகள், அதிநவீன துப்பாக்கிகள், கையெறி குண்டுகள் ஆகியவற்றையும் நெதர்லாந்து அரசு உக்ரைனுக்கு வான்வழியாக அனுப்பியுள்ளது .*

*ஆனால் ரஷ்யாவின் ஆயுத பலத்திற்கு முன்னர் உலக நாடுகள் உக்ரைனுக்கு வழங்கும் இந்த ஆயுதங்களின் பலம் மிகவும் குறைவு என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.*

*இன்று (26.02.2022) 3ஆவது நாளாக தாக்குதல் நடத்தி வரும் ரஷ்ய படைகள், தலைநகர் கீவ்வை கைப்பற்றும் முயற்சியில் தீவிரமாக உள்ளன. ஆனால், அந்த நகரை தக்க வைப்பதில் உக்ரைன் இராணுவம் கடுமையாக போராடி வருகிறது.*

*இதனிடையே ரஷ்ய படைகள் நெருங்கி வருவதால், தலைநகர் கீவிலிருந்து வெளியேறுங்கள் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கு அமெரிக்கா ஆலோசனை வழங்கியுள்ளது. ஆனால் ஜெலன்ஸ்கி இந்த ஆலோசனையை ஏற்க மறுத்திருக்கிறார். சண்டை இங்கேதான் நடக்கிறது. எனக்கு ஆயுதங்கள்தான் தேவை, சவாரி அல்ல என்று ஜெலன்ஸ்கி தெரிவித்திருக்கிறார்.*

*இதனிடையே ரஷ்ய அரச ஊடகங்கள் வெளியிடும் செய்திகளை தணிக்கை செய்த பேஸ்புக் நிறுவனத்தின் மீது ரஷ்யாவும் கட்டுப்பாடு விதித்துள்ளது. உக்ரைன் மீதான தாக்குதல் குறித்து ரியா நியூஸ் ஏஜென்சி உள்ளிட்ட ரஷ்ய அரச ஊடகங்கள் பேஸ்புக் தளத்திலும் செய்திகளை பதிவு செய்து வருகின்றன. இந்தச்செய்திகளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்த பிறகே தங்கள் தளத்தில் பேஸ்புக் அனுமதிக்கிறது.*

*உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி வெளியிட்ட வீடியோ ஒன்றில் - கீவ் நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் எங்களது கட்டுப்பாட்டில் தான் உள்ளன . நகரை பாதுகாக்க முன்வருபவர்களுக்கு ஆயுதங்களை தர தயாராக உள்ளோம். இந்த போரை நிறுத்த விரும்புகிறோம். அப்போது தான் அமைதியாக வாழ முடியும். ரஷ்யாவின் தாக்குதல் திட்டத்தை முறியடித்துள்ளோம். போரை எதிர்த்த ரஷ்யர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம். போரை நிறுத்துவதற்கு ரஷ்யாவிற்கு நெருக்கடி கொடுக்க வேண்டும். உங்களிடம், எங்களிடமும், உலகத்திடம் பொய் சொல்பவர்களை நிறுத்த வேண்டும் என அந்த வீடியோவில் தெரிவித்துள்ளார் .*

*2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் கிரீமியாவை ரஷ்யா தன்னுடைய நாட்டுடன் சேர்த்துக் கொண்டது. ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஆழமான - அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விரிவான வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புவதாக உக்ரைன் அறிவித்தது. அதை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றது. இவ்வாறு உக்ரைன் ஐரோப்பிய நாடுகள் பக்கம் சாய்வது பின்னாளில் தனக்கு ஆபத்தாகிவிடும் என்று அஞ்சுவதால் ரஷ்யா தீவிரமாகத் தலையிடத் தொடங்கியது.*

*கிரீமியாவை ஆக்கிரமித்து தனது நாட்டுடன் சேர்த்துக் கொண்டதைப் போல உக்ரைனையும் சேர்த்துக்கொள்ளப் பார்க்கிறது. இதனாலேயே ரஷ்யாவுக்கு அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. பக்கத்து நாடுகளுடன் தேவையில்லாமல் எல்லைப் பிரச்சினை செய்யும் சீனாவும், ரஷ்யாவும் இப்போது தங்களுடைய வல்லாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவே தேவையின்றி தலையீடுகளை செய்து வருகின்றன. இப்போதைக்கு இதுதான் உக்ரைன் நெருக்கடிக்கு ஒரே காரணம்.*




படம்: இலக்கியா

**ஹென்**றியை ஒரு மாத காலமாகக் காணவில்லை. மனசு மெதுவாய் கசிகிறது. ஹென்றியிடம் மெதுவான மனப்பிறழ்வு அல்லது மனப்பிறழ்வு போன்ற தன்மை காணப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும் அவனது தனிமை காரணமாக ஹென்றியுடன் சிறிது நெருங்கிப்பழகினேன். அவனிடம் தான் ஒரு பிரெஞ்சுப் பூர்வீகக் குடிமகன் என்ற பெருமையும் கர்வமும் இருந்தது. நான் அதைப் பொருட்படுத்தவில்லை. எனது பிள்ளைகளுக்கு அவனது கர்வம் சற்று நெருடலாகவே இருந்தது. அவர்களைச் சமாதானப்படுத்த நிறையவே முயற்சி செய்யவேண்டியிருந்தது. ஒரு மனிதனின் தனிமை, வெறுமையான வாழ்வு அவர்களை மிகை உணர்ச்சியுள்ள மனிதர்களாக, ஆழ்மன விருப்புகளை சடுதியாக வெளிப்படுத்திவிடும் மனிதர்களாக மாற்றிவிடுகிறது.

ஹென்றி தான் நினைத்த வேளைகளில் சிரித்தான். தான் விரும்பியபோது மட்டும் வணக்கம் சொன்னான். தான் விரும்பியபோது மட்டும் பேசினான். ஹென்றியுடன் பழகுவதற்கு அயலுள்ளவர்கள் விரும்பவில்லை. அவனை ஒதுக்கினார்கள். அந்த ஒதுக்கல் அவனை மேலும் சிக்கலுக்குள் உள்ளாக்கியது.
ஹென்றி எனது வீட்டுக்கு வந்து உரையாடுமளவுக்கு நான் அவனுடன் நட்பு பாராட்டினேன். அவனிடம் நிறைய விசயங்கள் இருந்தன. நிறையப் படித்திருந்தான். நிறைய உரையாடினான். உரையாடும்போது என்னையும் பரீட்சித்துப்பார்க்க அவன் தயங்கவில்லை. ஓ! உனக்கும் இந்த விசயங்களெல்லாம் தெரியுமா! என்று அவன் புருவங்களை உயர்த்தியபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவன் எங்கள் சாப்பாடு பற்றி சிலாகித்துப் பேசினான். நாங்கள் அச்சப்பட்டதற்கு மாறாக எங்கள் தாளித்த வாசம் அவனைக் கவர்ந்திருந்தது. நாங்கள் ஹென்றிக்கு விருந்து வைத்தோம். வயிறாற உண்டான். மகிழ்ச்சி தெரிவித்தான். எங்களையும் தன்வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தான். மனைவியும் பிள்ளைகளும் சங்கடப்பட்டார்கள். நான் மட்டும் விருந்துக்குப் போனேன்.

பெண்ணாம் பெரிய அவனது வீடு பாழடைந்த குகைபோல காட்சியளித்தது. எல்லாமே போட்ட போட்ட இடங்களில் அப்படியே கிடந்தன. ஒரு வகை துர்நாற்றம் வீசியது. சாப்பாட்டு மேசையில் தான் தயாரித்த உணவு வகைகளை கொணர்ந்து அடுக்கினான். வைன் குடிக்கிறாயா? என்று கேட்டான். எப்படி நான் மறுப்பது? ஓம் என்றேன். வைன்போத்தலை கையிலெடுத்தவன் அந்த வைன் பற்றி அதன் பெருமை பற்றி நீண்டநேரம் விளக்கினான்.
சாப்பிடுவதற்கு மிகவும் சிரமப்பட்டேன். குமட்டிக்கொண்டு வந்தது. அவன் மனம் நோகாமல் நடந்துகொள்வதில் கண்ணும் கருத்துமாயிருந்தேன்.

நான் ஒரு புதிய கார் வாங்கினேன். கார் வாங்கியதிலிருந்து அவனது மனநிலையில் ஒரு மாற்றத்தை அவதானித்தேன். என்னுடன் பேசும் போது தன்னுடைய கார் பற்றி மட்டுமே பேசினான். அதை கொம்பனியிலிருந்து புதிதாக தருவிக்கப்பட்ட முறை பற்றியும் அந்தக் காரின் சிறப்புப் பற்றியும் இடைவிடாது பேசிக்கொண்டே இருந்தான். ஒரு கட்டத்தில் “நீ ஒரு வெளிநாட்டவன் எப்படி நீ புதிய கார் வாங்கலாம்?” என்று வெளிப்படையாகவே கேட்டான்.

எனக்கு கஸ்ரமாக இருந்தது. சிரித்துச் சமாளித்தேன். பிள்ளைகளுக்கு வணக்கம் சொல்வதை நிறுத்தினான். எப்போதும் புறுபுறுத்தபடி திரிந்தான்.

அவனது தொடர்பைத் துண்டிக்கும்படி பிள்ளைகள் என்னை வேண்டினார்கள். "இல்லை. அப்படிச் செய்யக்கூடாது. அது அவனை மேலும் சங்கடப்படுத்தும். அயல் வீட்டில் வேறு வாழ்கிறான். பகையுணர்வை வளர்ப்பது நல்லதல்ல" என்று அவர்களை நான் மீண்டும் ஆறுதல் படுத்தினேன்.

எங்கள் வீட்டையும் அவனது வீட்டையும் முட்கம்பிவேலி பிரித்தது. அந்த வேலியில் குருவிச்சை போன்ற கொடிஒன்று படர்ந்தது. அந்தக் கொடியை வெட்டுமாறு என்னைப் பணித்தான். ஆம்! என் வீட்டு நிலத்திலிருந்து தானாக முளைத்த கொடிதான். நான் தான் அகற்றவேண்டும். அகற்றினேன்.

ஒரு வாரம் கழித்து வீட்டு அழைப்பு மணியை அழுத்தினான். "வணக்கம் ஹென்றி!" என்றேன். அவன் பதில் வணக்கம் சொல்லவில்லை. உன்னுடைய கொடியால் என் வேலி பழுதடைந்துவிட்டது. அதற்கு நஷ்டஈடு தரவேண்டுமென்றான். நான் திடுக்குற்றேன்.

ஆனாலும் அமைதியாக "வா ஹென்றி வீட்டுக்குள்ளே சென்று பேசலாம்!" என்றேன். அவன் வர மறுத்தான். நஷ்ட ஈட்டில் குறியாக நின்றான். "தானாக முளைத்த இந்த கொடியால் உன் வேலி பழுதடையவில்லை. உன்னுடைய வேலி போட்டு எவ்வளவு காலம்?" என்றேன்.
நாற்பது வருடங்கள் என்றான்.
நான் சிரித்தேன்.
என்னுடைய சிரிப்பு அவனுடைய கோபத்தை இன்னும் அதிகரித்தது. அவன் கத்தினான். தெருவில் போனவர்கள் எங்களைப் பார்த்தார்கள். எனக்கு கூச்சமாக இருந்தது. தான் சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என்றான்.
எனக்கும் கோவம் வந்தது. "நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள். ஒரு சல்லிக்காசு கூட உனக்குத் தர முடியாது" என்று பேசி அவனை அனுப்பிவைத்தேன். அன்றிலிருந்து அவனை நேருக்குநேராக சந்திப்பதைத் தவிர்த்தேன். ஆனாலும், அவனது நடமாட்டத்தை நானும் பிள்ளைகளும் அவதானித்தே வந்தோம்.

இப்போ ஒருமாதகாலமாக அவனைக் காணவில்லை. ஒரு நாள், இரண்டு நாள் போக திரும்பி வந்துவிடுவான் என்றே எதிர்பார்த்தோம். இப்போ வாரங்கள் மாதங்களாகிவிட்டன.
ஹென்றிக்கு ஏதாவது நடந்திருக்கலாம் என்று மனது சஞ்சலப்படுகிறது. மனது கேளாமல் அவன் வீட்டு அழைப்பு மணியை இரண்டு மூன்று தடவைகள் சென்று அழுத்தியும் பார்த்தேன். பதிலில்லை.

அவனுக்கு ஏதாவது நடந்தால்கூட உடனே தெரியவராது. யன்னல் திறந்திருக்கிறது. அவனது காரைக் காணவில்லை. அநேகமாக ஹென்றிக்கு ஏதாவது நடந்திருக்கலாம் என்றே நாங்கள் ஊகிக்கிறோம். அவனது பிரிவு எங்களுக்கு மிகுந்த சிரமத்தைத் தருகிறது.

---

சின்னட்டிக்கதை

**சோகங்களையும் ரசிக்கப் பழகிக்கொள்ளுங்கள்!**

நண்பர் ஒருவர் இன்னொரு நண்பரின் தொலைபேசி இலக்கத்தைக் கேட்டார்.
ஓம். தருகிறேன் என்றேன். பின்னர் மறந்துவிட்டேன். இரண்டு நாட்கள் கழித்து சற்று கடுந்தொனியில் நினைவுபடுத்தினார்.
மன்னிப்புக் கோரியபடி அனுப்பிவைத்தேன்.
மேலும் இரண்டு நாட்கள் கழித்து திரும்பவும் அழைத்தார்.
நீங்கள் தந்த இலக்கத்தை தொடர்பு கொள்ள முடியவில்லை என்றார். நான் பதில் தருவதற்கு முன் படபடவென்று பொரிந்து தள்ளினார்.
நண்பரிமிருந்து இவ்வளவு வசவு வார்த்தைகளை நான் கேட்டதேயில்லை.

நான் திகைத்து நின்றேன். அவர் போல நானும் வாரத்தைகளை உதிர விட்டிருந்தால் அந்தக்கணமே நட்பு சிதறியிருக்கும். அவருக்கும் என்னென்ன பிரச்சனையோ? என்ன மனநிலையில் இருந்தாரோ? பொறுமை காத்தேன்.
கற்பனைவளம் மிக்க மனிதர்களுடன் காலங்கடத்துவது அவ்வளவு சுலபமல்ல.
ஒரு சாதாரண விடயத்தை அவர் என்னென்ன கோணத்தில் அலச முடியுமோ அந்தளவுக்கு அலசிவைத்தார். அவர் சந்தேகப்படலாம்! தப்பில்லை. ஆனால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ததை ஏற்றுக்கொள்ள சிரமமாயிருந்தது.
செய்யாத குற்றத்திற்கு தண்டனை அனுபவிப்பதுபோன்ற கொடுமை வேறொன்றும் கிடையாது.
கோபாவேசக்கனல் பறந்த வார்த்தைகளை தெறிக்கவிட்டதோடாவது அவர் நிறுத்தியிருக்கலாம்!
தொலைபேசியை முகத்திலடித்தாற்போல் அடித்து வைத்தார்.
நானும் சராசரி மனிதன்தானே! அடித்துவைத்த தொலைபேசியை இனி அவர்தான் எடுக்கவேண்டும்.
ஒரு போதும் இனி நான் எடுக்கப்போவதேயில்லை.!!

அமரர் கலைக்குருசில், தமிழ்ப் பண்பாட்டுக் காவலர்

# பிரான்சிஸ் ஜோசப்

(எழுத்தாளர், சமூக சேவகர் -நாவாந்துறை யாழ்ப்பாணம்)



பிரியமதா பயஸ்

ஒருமனிதனின் வாழ்வு முழுமையடைதல் என்பது அந்த மனிதன் இந்த சமூகத்தில் எப்படி வாழ்ந்தான் என்கின்ற பார்வையில் மட்டுமே உள்ளது. ஒரு மனிதனால் சமூகத்துடன் இயைந்தும் சமூகத்தை மதித்தும் வாழமுடியுமானால் அந்த வாழ்வு தெய்வீகமானது. அந்தவாழ்வு மனிதவாழ்வின் முழுமையானது, அந்த வாழ்வு பெருமை மிக்கது, அந்த வாழ்வு போற்றுதலுக்குரியது, அந்தவாழ்வு அழிக்கமுடியாத வரலாற்றைக் கொண்டது, அந்த வாழ்வு நெடுங்காலம் நிலைக்க கூடியது. அப்படியானதொரு வாழ்வை வாழ்ந்து, இந்த உலகில் இருந்து தன் புகழுடலால் நீங்கி இருக்கிறார அமரர் கலைக்குருசில் பிரான்சிஸ் ஜோசப் அவர்கள். யாழ்ப்பாணத்தின் நாவாந்துறை மண்ணின் மூத்த எழுத்தாளரும், சமூக சேவகருமான பிரான்சிஸ் ஜோசப் அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி தனது 86 ஆவது வயதில் பூதவுடல் நீங்கி புகழுலகில் சங்கமமானார்.

இயற்கையுடன் இணைந்த வாழ்வியலை கொண்ட நாவாந்துறை மக்கள் எப்போதும் இயல்பான சமூக நல்நோக்கம் கொண்டவர்களே, கடலும் கடல் சார்ந்த அழகியலையும் தம் வாழ்வியலாக கொண்ட இவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருந்த கலைக்குருசில் பிரான்சிஸ் ஜோசப் நாவாந்துறை மக்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்தவர்.

கலைக்குரிசில் அரச கௌரவத்தை பெற்றிருக்கும் பிரான்சிஸ் ஜோசெப் நாவாந்துறை மண்ணின் பெருமைகளையும், அங்கே வாழ்ந்தவர்களின் வரலாறுகளையும், தான் பின்பற்றும் மதம்சார்ந்த பெரியவர்களின் வரலாறுகளையும்,மண்ணின் சிறப்புகளையும், வரலாற்று சான்றுகளாக எழுத்துருவில் இந்த சமூகத்துக்கு வழங்கி இருக்கிறார். யாழ்ப்பாணத்தின் நாளிதழ்களான ஈழநாடு, ஈழமுரசு, சஞ்சீவி, உதயன், வலம்புரி, தினக்குரல் போன்ற பத்திரிகைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட சமூக கவிதைகளையும், எங்கள் வரலாற்று சிறப்பு நாள்களுக்கான கவிதைகளையும் வரலாறு திரிபுபடாத படைப்புக்களாக வெளிக்கொணர்ந்து இருக்கின்றார்.

நாவாந்துறை மண் தொடர்பாகவும், அந்த மக்களின் வாழ்வியல் தொடர்பாகவும் பல்கலைக்கழகத்தின் வரலாற்று துறை மாணவர்கள் பல்கலைக்கழக பேராசிரியரிடம் கற்றுக்கொண்டதைவிட பிரான்சிஸ் ஜோசெப் அவர்களிடம் கற்றுக்கொண்டதே அதிகம் என்று சொல்லலாம். அந்தளவிற்கு அந்த பகுதி மக்களின் வரலாற்றை நன்கு தெரிந்தவராகவும், கரையோர மக்களின் வாழ்வியல் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வுகளை சொல்லக்கூடிய அனுபவசாலியாகவும் பிரான்சிஸ் ஜோசெப் அவர்கள் இருந்து

இருக்கிறார். ஆண்டு விழாக்கள், எம் மண்ணின் விடுதலை வீரர்களின் வரலாறுகளை அத்துப்படியாக தெரிந்துவைத்திருக்கும் பிரான்சிஸ் ஜோசெப் அவர்கள் இந்த வரலாற்று பொக்கிஷங்களை பெரும்பாலும் கவிதை வடிவிலேயே நமக்கு வழங்கி இருக்கிறார். ஈழப் போராட்டம் தொடர்பான வரலாற்று செய்திகளை அவர் அதிகம் தன்னகத்தே வைத்திருந்தவர். மண் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் எப்போதும் கரிசனையுடன் இருந்த அவர் வரலாறுகளை மாணவர்கள் மத்தியில் இட்டு செல்வத்திலும் அக்கறைகாட்டிய ஊர் பெரியவராகவே திகழ்துள்ளார்.

நாவாந்துறை மக்களின் வாழ்வியல் தொடர்பான ஆய்வுகளுக்கு யார் சென்றாலும் பிரான்சிஸ் ஜோசெப் அவர்களே வரலாற்றை விளக்கக்கூடிய பெரியவராக அனைவராலும் கைகாட்டி விடப்படும் பெரியவராவார். மூன்று தலைமுறையினரின் வாழ்க்கை தாற்பரியங்களை பார்த்திருக்கும் பிரான்சிஸ் ஜோசெப் அவர்கள். அந்தந்த தலைமுறையினரின் வாழ்க்கை போக்குகளையும் தேவையான நல்நோக்க சிந்தனைகளையும் எழுத்துவருவில் சமகால அச்சு ஊடகங்களில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

நாவாந்துறை மண்ணின் ஆலயங்களின், பாடசாலைகளின், பொது அமைப்புகளின், விளையாட்டு கழகங்களின், ஏன் நம் வரலாற்று வீரர்களின் மலர்களிலும் கல்வெட்டுகளிலும் அவரின் எழுத்துக்கள் இல்லாமல் வெளிவந்தே இருக்காது. அவரின் வாழ்த்து செய்தி ஒன்றோ அல்லது வரலாற்று பதிவு ஒன்றோ இல்லாமல் ஆண்டுமலர்களை காணமுடிவதில்லை. பெரும்பாலும் அவர் சார்ந்த சமயம் தொடர்பான நிகழ்வுகளில் அவரின் பங்களிப்பும் எழுத்தும் மிகவும் பிரதானமானதாகவே இருக்கும். அதுபோல வறியவர்களுக்கு உதவும் அமைப்பில் அவர் அங்கம் வகிக்கும் காலம்முதல் இன்றுவரை அவரின் உதவியும் ஆலோசனையும் எப்போதும் முதன்மையாகவே இருந்திருக்கிறது.

தமிழனின் வரலாற்றை வரலாறாக உண்மையாக அடுத்த சந்ததிக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதில் எப்போதும் முனைப்புடன் இருந்த பிரான்சிஸ் ஜோசெப் வரலாற்று தடங்களை தன் மனதில் வைத்து இருக்காமல் எழுத்து வடிவில் அடுத்த தலைமுறைக்கு வழங்கி இருப்பது என்றும் மதித்து போற்ற தக்க வரலாற்று செயற்பாடே.

அமரரின் இறுதி நிகழ்வில் அவரின் அத்தனை பண்புகளையும் அவரை சார்ந்து அறிவு பெற்றோர் சொல்லி சொல்லி வேதனை அடைந்தனர். நாவாந்துறை புனித மரியாள் சனசமூக மண்டபத்தில் அவரது இறுதி அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. புனித மரியாள் சனசமூக தலைவர் நிகழ்வினை ஆரம்பித்து இரங்கலுரை நிகழ்த்தி, முற்பகுதியினை தொகுத்தும் வழங்கினார். நாவாந்துறை புனித நீக்கிலார் சனசமூக நிலைய தலைவர், யாழ் மாநகர ஆணையாளர் இ.ஜெயசீலன், யாழ் திருமறைக்கலாமன்ற உறுப்பினர்கள், யாழ்ப்பாணம் நூலக உறுப்பினர்கள், கிராம அலுவலர், சமூகசேவை உத்தியோகத்தர், கிராம சனசமூக நிலைய கலைப்பிரிவினர், புனித வின்சென்டிபோல் சபையினர், அமரரின் மூத்த புதல்வி என அத்தனைபேரும் நல்லமனிதர் பண்பானவர் என்கின்ற வார்த்தைகளை மூச்சுக்கு மூச்சு உச்சரித்து கண்ணீர் சொரிய உரை நிகழ்த்தினர்.
நிகழ்வினை கலைஞர் N.M.பாலச்சந்திரன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இறுதியாக சிறப்பு திருப்பலி வழங்கிய அருட்தந்தை A.M.Stephen C.R அடிகளார் அன்னாரின் வாழ்க்கையை புனித மேரி மாதாவின் வாழ்க்கை நெறிகளுக்கு ஒப்பிட்டு, அவரின் வாழ்வியலோடு மாதாவின் வாழ்வியலும் பிரிக்கமுடியாதது என மனமுருகி சிறந்த ஆன்மிக உரையினை நிகழ்த்தினார். மக்களுக்காகவும் தன குடும்பத்துக்காகவும் தனது வாழ்வை பெருமையுடன் அர்ப்பணித்தமையும், யாரிடம் இருந்தும் பிரதிபலன்பாராத சேவையும் என மிக நுணுக்கமான பட்டறிவுடன் செயற்பட்ட அமரரின் வாழ்க்கை மக்களுக்கு உதாரணமானது என குறிப்பிட்டார்.

ஒருமனிதனின் மரணம் பெரும் வரலாறு ஆகவேண்டும் ஒருமனிதனின் இறப்பின்பின் பலர் கண்ணீர் மல்குகின்றார்கள் எனில் அவனே இந்த உலகில் நேர்த்தியாக வாழ்ந்த மனிதன் என்பதை உதாரணமாக வாழ்ந்து காட்டி இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் சேவை என்ற வார்த்தைக்கு அர்த்தம் தந்து மண்ணுலகில் மறைந்துபோன அமரர் பிரான்சிஸ் ஜோசெப் அவர்களின் ஆத்மா சாந்தி பெறட்டும்.

## ரசியா இனி நிம்மதியாக இருக்க முடியாது? -ஜீவன்-



உக்ரேனை ஆக்கிரமிப்பது, ரசியா நினைத்தது போல இலகுவானதல்ல எனத் தோன்றுகிறது.

அகதியாக வெளியேறுவோரை விட ஆயுதத்தை கையிலெடுத்த குடிமக்கள் உக்ரேனில் அதிகரித்து விட்டனர். உக்ரேன் மக்களும் ரசியரை போலவே போர்களுக்கு முகம் கொடுத்து பழக்கப்பட்டவர்கள்தான். அவர்களும் முன்னாள் ரசிய நாட்டவர்களே.

அகதி பிரச்சனை, மக்கள் குடியிருப்புகளை தாக்குதல், பொதுமக்களின் இறப்புகள் என உலக மக்களின் அதிருப்தி ஆகியவை ரசியாவை தனிமைப்படுத்தும் போது உக்ரேனுக்கு உலக ஆதரவு அதிகரிக்கும். அதை வைத்தே உலக நாடுகள் காய் நகர்த்துவது இலயல்பு. அத்தோடு உக்ரேனை அண்டிய நாடுகள் நேட்டோவில் இணைந்திருப்பதால், அடுத்து அவர்களுக்கும் ரசியா பிரச்சனையாகலாம். எனவே அந்நாடுகளும் பகிரங்கமாகவோ அல்லது மறைமுகமாகவோ உக்ரேனுக்கு இராணுவ உதவிகளை வழங்கலாம். அது இப்போதே ஆரம்பித்துள்ளது. ஐ.நாவிலும், ரசியாவுக்கு ஆதரவு குறைந்தே உள்ளது.

ரசியாவுக்குள்ளேயும், போரை எதிர்க்கும் ரசிய மக்களது தொகை அதிகரித்துள்ளது. அநேக ரசியர்களும் போரை விரும்பவில்லை. போரை எதிர்த்து வீதிகளுக்கு வரும் மக்களை, ரசிய அரசு கைது செய்து வருகிறது. ஆனாலும் ரசிய மக்கள் போரை எதிர்ப்பது தணிந்தபாடில்லை.

போர் மேகங்கள் இப்போதைக்கு முடிவுக்கு வராது. ஆனால் ரசியாவால் உக்ரேனை முழுமையாக ஆக்கிரமிக்க முடியும் எனத் தோன்றவில்லை. காரணம் இலகுவாக கைப்பற்றி விடுவார்கள் என நினைத்த கிவ் தலைநகரை கைப்பற்றும் முயற்சி ரசியாவுக்கு பெரும் தோல்வியாக முடிந்துள்ளது. ரசிய இராணுவத்தின் இழப்புகள் அதிகரித்துள்ளன. உக்ரேன் இராணுவம் போல் கிவ் நகருக்குள் நுழைந்த ரசிய இராணுவத்தினர், உக்ரேனிய இராணுவத்தினரால் கொல்லப்பட்டும், கைதாகியும் உள்ளனர்.

ரசியா ஆக்கிரமிப்பை நிறுத்தி சமாதான பேச்சு வார்த்தை ஒன்றுக்கு வந்து, போர் நிறுத்த வழிக்கு வருவதே இப்போதைக்கு சிறந்தது.

ரசியா, உக்ரேனை பேச்சு வார்த்தைக்கு பெலாரசுக்கு வருமாறு அழைத்திருந்த போதிலும், அதை உக்ரேன் நிராகரித்துள்ளது. பெலாரசை தவிர்த்து ஐரோப்பிய நாடொன்றில் பேச்சு வார்த்தை நடத்தவே உக்கிரேன் விரும்புவதாக அறிவித்துள்ளது.

உக்ரேன் நாட்டுக்குள் பாரசூட் மூலம் குதித்த ரசிய இராணுவத்தினரில் அநேகரை உக்ரேன் மக்களும், இராணுவத்தினரும் கைது செய்து, அவர்களை நிராயுதபாணிகளாக்கி அரசியல் கைதிகளாக்கியுள்ளனர்.

அதே நேரம் உக்ரேனிய இராணுவத்தால் கொல்லப்பட்ட ரசிய இராணுவத்தினரது உடல்களை, அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்க விரும்புவதாக உக்ரேன் அறிவித்துள்ளது.

போர் நிறுத்தம் ஒன்று ஏற்பட்டாலும், உக்ரேன் மக்கள் மனதில் ரசியாவால் இனி இடம் பிடிக்க முடியாது. அந்த மக்கள் ரசியாவை எதிரியாக பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். உக்ரேனில் வாழும் ரசியர்கள் கூட ரசியாவை எதிரியாகவே பார்க்க தொடங்கிவிட்டனர். இது ரசியாவுக்கு கெட்ட பெயர்தான். சர்வதேச நாடுகளும் ரசிய ஆக்கிரமிப்பை நேரடியாக எதிர்க்க தொடங்கிவிட்டது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அநேக நாடுகள் இராணுவ மற்றும் பண உதவிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்க முன் வந்துள்ளன. எனவே ரசியாவால், உக்ரேனை ஆக்கிரமிப்பது என்பது முடியாததாகவே தெரிகிறது.

ரசிய அதிபர் புட்டின், அணு ஆயுதங்களை பாவிக்கப் போவதாக பகிரங்கமாக அறிவித்திருப்பதானது, அவரை உலகம் தலைமை நிலையிலிருந்து ஒதுக்க வழி வகுக்கும்.
ரசியா, உக்ரேனை கைப்பற்றினாலும், கைப்பற்றாமல் போனாலும், இனி ரசியாவால் நிம்மதியாக இனி இருக்க முடியாது போகலாம்? □

# என் கதை

-வ.ஐ.ச.ஜெயபாலன்-



அவள் தனி வனமான ஆலமரம்.
நான் சிறகுகளால் உலகளக்கிற பறவை.
என்னை முதன்முதற் கண்டபோது
நீலவானின் கீழே அலையும்
கட்டற்ற முகிலென்றே நினைத்தாளாம்.
நானோ அவளை
கீழே நகரும் பாலையில் தேங்கிய
பாசி படர்ந்த குளமென்றிருந்தேன்.

ஒருநாள் காதலில் கிளைகளை அகட்டி
ஜாடை காட்டினாள்.
மறுநாள் அங்கிருந்தது என் கூடு.
இப்படித்தான் தோழதோழியரே
எல்லாம் ஆரம்பமானது.
தண்ணீரை மட்டுமே மறந்துபோய்
ஏனைய அனைத்துச்செல்வங்களோடும்
பாலை வழி நடந்த காதலர் நாம்.

அவளோவேரில்நிமிர்ந்த தேவதை.
நிலைப்பதே அவளது தர்மமாயிருந்தது.
சிறகுகளில்மிதக்கும்எனக்கோ
நிலைத்தல் இறப்பு.
மண்ணுடன் அவள் எனை
வேரால்இறுகக் கட்ட முனைந்தும்,
நானோ விண்ணுள் அவளைச் சிறகுடன்
எய்ய நினைந்து, தோற்றுப் போனோம்.

உண்மைதான் அவளை
நொண்டி யென்று விரக்தியில் வைதது.
முதலில் அவள்தான் என்னைப் பார்த்து
கண்ட மரம் குந்தி, ஓடுகாலி
மிதக்கும் நரகல் என்றாள்.

ஒரு வழியாக இறுதியின் இறுதியில்
கூட்டுக்காகவும் குஞ்சுகட்காகவும்
சமரசமானோம்.
மாய ஊறவின் கானல் யதார்த்தமும்
வாழ்வின் உபாயங்களும்
காலம் கடந்தேவாய்த்தது நமக்கு
நம் காதலாய்அரங்கேறியதோ
உயிர்களைப் படைக்குமோர்
பண்ணையார்
என்றோ எழுதிய நாடகச் சுவடி.

இப்போது தெளிந்தேன்.
சந்திக்கும் போதெலாம்
என் தங்க ஆலமரத்திடம் சொல்வேன்.
“ஆயிரம் வனங்கள் கடந்தேன் ஆயினும்
உன் கிளையன்றிப் பிறிதில்
அமர்ந்திலேன்.”
மகிழ்ந்த என் ஆலமரம் சொல்லும்
“என்னைக் கடந்தன ஆயிரம் பறவைகள்
என் கிளைகளில்அமர்ந்ததோ
நீ மட்டும்தான்”

இப்படித்தான் தோழதோழியரே
ஒரு மரமும்பறவையும்காவியமானது.

# யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ்
## பெருமைமிகு வீரன் இன்று இல்லை



-ப்ரியமதா பயஸ்-

பெருமைகளுக்கெல்லாம் பெருமை சேர்த்த மிகப்பெரிய கால்பந்து வீரன் இன்று இந்த பூமியில் இல்லை என்கின்ற ஏற்று கொள்ள முடியாத உண்மையோடு இந்த பதிவைத் தருகிறோம்.

அழகிய கடல் வளத்துடன் திகழும் மன்னார் மாவட்டத்தின் பனங்கட்டிக்கொட்டு என்கின்ற சிறிய கிராமத்தில் 1990ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி இந்த விளையாட்டு வீரன் பிறக்கிறான். யாரும் எதிர்பாராத அதீத மனோபலமும் துடிப்பும் இவனோடு கூடவே பிறக்கிறது. யாராலும் இலகுவில் உணர்ந்து கொள்ள முடியாத மனோபலமும் துடிப்பும், துல்லியமான நுட்பமான செயற்பாடுகளும் இவன் ஒருநாளில் புகழின் உச்சியில் இருப்பான் என்பதை சொல்லி நின்றது.

அத்தனை விளையாட்டு வீரர்களுக்கும் இருக்கும் கனவோடு தன்னை மேம்படுத்தி, இலங்கையின் கால்ப்பந்து அணியில் அசைக்க முடியாத இடத்தை பிடித்தவர்தான் டக்சன் பியூஸ்லஸ். மன்னார் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையில் கல்விகற்ற காலத்தில் இந்த வீரனின் விளையாட்டுத் திறமையும், அவனுக்குள் இருந்த கால்ப்பந்து வீரனும் வெளித் தெரியதொடங்கிய போதே இந்த நிலையைத் தான் அடைய வேண்டும் என்று வெறியோடு போராடி தேசிய அணியில் இடம்பிடித்தவர் தன் பயணத்தை இன்னும் வலுவாக்கினார். இலங்கை அணியின் தடுப்பு சுவராக இருந்த டக்சன் பியூஸ்லஸ் இலங்கை அணிக்காக பல சாதனைகளைப் படைத்திருக்கிறார். கால்ப்பந்து உலக கிண்ணத்துக்கான தகுதிகாண் போட்டியில் இலங்கை தேசிய அணியில் பங்கேற்று எல்லோரையும் திகைக்க வைத்தவர்.

கடந்த ஆண்டு (2021) இடம்பெற்ற கால்ப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இந்திய அணியுடனான போட்டியில் இவரே சிறந்தவீரருக்கான கிண்ணத்தை வென்றார். இந்த போட்டி சமநிலையில் முடிவடைய முக்கியகாரணம் டக்சன் பியூஸ்லஸ்தான்.
டக்சன் பியூஸ்லஸ்போலவே தாமும் வரவேண்டும் என்று ஆசைகொள்ளும் இளம் விளையாட்டு வீரர்களுக்கு டக்சன் பியூஸ்லஸ் ஒரு கனவு நாயகனாக ரோல்மாடலாக இருப்பவர்.

2018ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய அணிகளில் 21 போட்டிகளில் விளையாடி இருக்கிறார் டக்சன் பியூஸ்லஸ். 12 வயதில் தன் திறமைகளில் நம்பிக்கை வைத்து முன்னேறியவருக்கு சிறந்த வழிகாட்டியாக இருந்தவர் தனது பயிற்றுவிப்பாளர் ஜேக்கப் ஞானராஜா என்று அவர்களை அடிக்கடி தன் நேர்காணல்களில் நினைவுகூரும் டக்சன் பியூஸ்லஸ் ஒரு சிறந்த மனிதநேயர் என்பதும் குறிப்பிடக்கூடிய விடயம்.

இந்திய சூப்பர் லீக் போட்டிகளுக்காக பரிந்துரை செய்யப்பட்ட வீரராக திகழ்ந்த டக்சன் பியூஸ்லஸின் திடீர் மரணம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. தான் பிறந்த மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை சேர்க்கும் விதமாக 21தேசிய சீருடைகளில் விடையாடிய மிகப்பெரும் பெருமையை கொண்டு இன்னும் இன்னும் சாதனைகளை புரியக்கூடிய ஒரு இளைய வீரரை இலங்கையின் தமிழ் மண் இழந்து இருப்பது மிகப்பெரிய சோகம் .

2020ஆம் ஆண்டு மாலைதீவு TC ஸ்போட்ஸ் கிளப்பில் இணைந்த டக்சன் பியூஸ்லஸ், அதன்பின்னர் வலன்சியா ஸ்போட்ஸ் கிளப்பில் டக்சன் விளையாடிக்கொண்டு இருந்தார். பியூஸின் உயிரிழப்பு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக பலரும் தமது இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர்.
மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்ற இவர், பாடசாலை காலத்தில் மத்திய களத்தில் (CD) தடுப்பாட்ட நுட்பத்துடன் விளையாடும் சிறந்த வீரராக இருந்தார்.

இலங்கை அணியின் தேசிய அணியில் இடம் பிடித்த பின்னர், கால்ப்பந்து உலக கிண்ண கோப்பைக்கான (FIFA World Cup) தகுதிகான் போட்டியில் இலங்கை தேசிய அணியில் பங்கேற்றுச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்தார்.
அதே நேரம் இலங்கை தேசிய அணியில் சிறந்த பின் கள வீரராக விளங்கினார். இவ்வருடத்திற்கான மிக பிரபலமான வீரருக்காக இடம் பெற்ற கருத்து கணிப்பில் ரன்னரப்பாக பியூஸ்லஸ் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க விடையம்.

ஆயிரம் கனவுகளை சுமந்து நம் கனவுகளின் நாயகனாக விளங்கிய பியூஸ்லஸ் இறப்பே மிகுந்த மர்மமாகவே இருக்கிறது.

மாலைதீவில் அவர் தங்கியிருந்த இடத்தில் கடந்த 27 ஆம் திகதி சடலமாக மீட்கப் பட்டுள்ளார். இவரின் இறப்பு தற்கொலை என சந்தேகிக்கப் பட்டாலும் இறப்பில் பாரிய மர்மம் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாலைதீவு பொலீசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையின் புகழ்பூத்த ஒரு விளையாட்டுவீரன் மர்மமாக மரணித்துப்போனது பெரும் துயரமே. □

# உயிரோடு உறவாடு



**வாசகர் உடல் - உளம் சம்பந்தமான கேள்விகளும் மருத்துவரின் பதில்களும்**

Dr. லிமலநாதன் MD PhD (Senior Consultant Cardiologist, Oslo, Norway)

**எனது மகனுக்கு 5 வயது. அவருக்கு வாயை சுற்றியும் உள்ளங்கையிலும் சிறிய சிறிய பருக்கள் தோன்றி உள்ளன. இது** Hånd-, fot- og munnsykdom **என்று கூறுகின்றனர். இது எவ்வாறான நோய்?**



*இது வைரசினால் ஏற்படுகின்ற ஒரு தொற்று நோயாகும். Coxsackie எனப்படுகின்ற வைரசுகளால் ஏற்படுகின்ற இந்நோயால் பெரிதும் பாதிக்கப்படுவது குழந்தைகளேயாகும்.*

*இது பொதுவாக பாலர்பாடசாலைகளில் பரவுவது வழமை. ஒரு பிள்ளைக்கு தொற்று ஏற்பட்டால் அதிதீவிரமாக மற்றைய பிள்ளைகளுக்கும் பரவக்கூடியது.*

*ஏனைய வைரசு தொற்றுக்களைப் போலவே காச்சல், உடல்அலர்ச்சி, சாப்பாட்டில் நாட்டமின்மை என்பன ஆரம்ப நோய்க்குரிய அறிகுறிகளாகவும், தொடர்ந்து தொண்டை நோவும் இறுதியில் வாய், நாவின்நுனிப்பகுதி, கைகள் மற்றும் பாதங்களில் பருக்களும் தோன்ற தொடங்கும். பருக்கள் மறைவதற்கு 1 - 2 வாரங்கள் எடுக்கக்கூடும். பருக்கள் தோன்றும் போதே இந்நோயென வைத்தியர்களால் உறுதிப்படுத்தப்படுவதால் தடுப்புமுறைகளைக் கடைப்பிடிக்க தொடங்கு முன்னரே நோய் தீவிரமாக பரவிவிடுவதுண்டு.*

*தொற்று ஏற்பட்டவரின் உமிழ்நீர், சளி என்பன இருமும் போதும், தும்மும் போதும் மற்றவரைச் சென்றடைவதால் இந்நோய் பரவுகின்றது. தவிரவும், பருக்களிலிருந்து வடியும் நீரினூடாகவும் பரவக்கூடிய வாய்ப்புள்ளது. நோயரும்பு காலம் 4 - 6 நாட்களாகும்.*

*இது வைரசு தொற்று என்பதால் காய்ச்சலை தணிப்பதற்குரிய மருந்தைத் தவிர வேறெந்த சிகிச்சைகளுமின்றி குணமடைந்துவிடும்.*

*இப்போது வைரசு தொற்று தொடர்பாக உலகமே கிலி கொண்டிருக்கின்றது. ஆனாலும் இந்த வைரசு ஆபத்தானதல்ல. இதிலிருந்து இலகுவில் குணமடைந்துவிடலாம்.*

## Blodpropp **(இரத்த உறைவு) என்றால் என்ன? இது ஆபத்தானதா?**

*காயங்கள் ஏற்பட்டு குருதிப்பெருக்கு ஏற்படுகின்ற போது அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உடலில் இயற்கையாக இருக்கின்ற பொறிமுறைதான் குருதி உறைவு.*

*ஆனால் இது அசாதாரணமாக குருதிக்குழாய்களிலோ அல்லது உடலுறுப்புக்களிலோ ஏற்படுகின்ற போது குருதிச் சுற்றோட்டம் தடைப்பட்டு மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.*

*உடலுறுப்புகளுக்கு குருதியை எடுத்துச் செல்லும் நாடிகளில் குருதியுறைந்து இரத்தக்கட்டிகள் ஏற்படுகின்ற போது இவ்வுறுப்புக்கான குருதிவழங்கல் தடைப்பட்டு உறுப்புக்களில் பாதிப்பும் பாரதூரமான பின்விளைவும் ஏற்படும். இது தான் மாரடைப்பு ஏற்படுகின்ற போது இதயத்திலும், பக்கவாதம் ஏற்படுகின்ற போது மூளையிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்ற பொறிமுறையாகும்.*

*இதேபோல் உடலுறுப்புகளிலிருந்து குருதியை இதயத்திற்கு எடுத்துச் செல்லும் நாளங்களிலும் குருதியுறைந்து இரத்தக்கட்டிகள் ஏற்படும் வாய்ப்பும் உண்டு. இது பொதுவாக கால்களிலும், அங்கிருந்து நுரையீரலுக்கும் செல்லும் சந்தர்ப்பமுண்டு. இதுவும் பாரதூரமான விளைவையும், உயிராபத்தையும் ஏற்படுத்தக்கூடியது.*

*எவ்வகையான குருதியுறைவு ஏற்பட்டாலும் விரைவில் வைத்திய உதவியை நாடி இரத்தக்கட்டியைக் கரைத்து உறுப்புக்களுக்கான குருதிப் பரிமாற்றத்தை மீளமைப்பதனூடாக உறுப்புக்களை பாதுகாப்பதே தகுந்த சிகிச்சை முறையாகும்.*

# தேசத்தின் வளங்களையும், சூழலியலையும் மறுதலிப்பதல்ல அபிவிருத்தித் திட்டங்கள்



-தமயந்தி.

சுமார் 35வருடங்களுக்கு மேலாக நிட்டூர யுத்தம் நிகழ்ந்த, நிகழ்த்தப்பட்ட தேசம் நம்முடையது.
இந்த யுத்தகாலங்கள் பிய்த்தெறிந்தவை பல்லாயிரக்கணக்கான உயிர்களை மட்டுமல்ல, தொழிற்சாலைகள், கால்நடைகள், அசையும் அசையாச் சொத்துக்களை மட்டுமல்ல, எமது வியத்தகு சுற்றுச்சூழல்,
பொருளாதார வளங்களையும் தான். இந்த வளங்கள் விளைநிலங்கள், தெங்குபனை வளங்கள் தொடக்கம் மிகப்பெரும் கடல்வளங்களையும் கொண்டதாக இருக்கிறது.

இலங்கையின் நிலப் பரப்பளவை விடவும் கடற்பரப்பானது எட்டு மடங்கு அதிகமானதாகும். இதில் 74.3வீதமான கடற் பிரதேசங்களானது வடக்கு கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களிலேயே அமைந்துள்ளது. அதாவது இலங்கைத்தீவின் முக்கால்வாசிக் கடல்வளங்கள் தமிழ்ப் பிரதேசங்களில்தான் உள்ளடங்கி இருக்கின்றன. போருக்கு முன்னைய காலகட்டங்களில் யாழ்ப்பாணம் மன்னார் பகுதிகளிலிருந்தும், கிழக்கிலங்கையிலிருந்தும் கருவாடாகவும், பச்சைமீனாகவும் வருடத்துக்கு பல்லாயிரம் மெற்றிக் தொன் கடலுணவுகள் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்பதெல்லாம் நாங்கள் அறிந்ததுதான்.

தவிரவும், கடலட்டை, சங்கு, நாவடம், சிங்கறால், தாமரை, அலங்கார வண்ண மீன்கள் என ஏற்றுமதி கடற்திரவியங்களாலும் பெரும் வருமானத்தை எமது கடல்வளங்களிலிருந்து அறுவடை செய்து வந்திருக்கின்றோம். யுத்தத்திற்குப் பின்னான காலங்களில் மேற்படி தொழில்முறைகள் முற்றாக அற்றுப்போயின.

35வருடங்களுக்கும் மேலாக நடந்த யுத்த நெருக்கு வாரங்கள் காரணமாகவும், இடப்பெயர்வுகள் காரணமாகவும் ஒட்டுமொத்த தமிழ்ப் பிரதேசங்களிலும் கடலுடனான நெருங்கிய உறவு எமது மக்களுக்கு இல்லாமல் ஆக்கப்பட்டது மட்டுமல்லாது, ஒரு தலைமுறையினரே கடல் பற்றிய பூரணமான அறிதல் அற்றவர்களாகவும், பாரம்பரியத் தொழில்சார் நுட்பங்கள் அறியப் படாதவர்களாகவும் ஆக்கப் பட்டுக் காணப் படுகிறார்கள். அதாவது மூத்த கடலோடிகளிடமிருந்து அவர்களது பாரம்பரி தொழில்முறை அறிவையும், வளங்கள் தொடர்பான புரிதலையும், இயற்கையான கடல் நுட்பங்களையும் அறிந்துகொள்ள முடியாதவர்களாக ஆக்கப் பட்டு விட்டார்கள்.
இந்த நிலையில், நவீன அபிவிருத்தி என்ற கண் கட்டும் பெயரில் பன்னாட்டு முதலாளிய நிறுவனங்களின் புதிய தொழில்முறைகள் அறிமுகமாகி வந்திருக்கின்றன. இவற்றிற் பல கடல்வளங்களுக்கும், சுற்றுப்புறச் சூழலுக்கும் மிகவும் பாதகமானவை.

கடற் திரவியங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதிக இலாபங்களை ஈட்டுவதற்கான நோக்கங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட தொழில்முறைகள். மிகக் குறுகிய காலத்தில் அதிக அறுவடை செய்யும் இத்தகைய தொழில்முறைகள் கடற் திரவியங்களை மட்டும் அறுவடை செய்யவில்லை, மாறாக எமது நிரந்தர வளங்களையும், சுற்றுச்சூழலையும் மொத்தமாகவே இல்லாதொழிக்கும் நாசகாரத் தொழில்முறைகளாகும். இவற்றிற் பல உயிரியல் ஊடுருவலாகவும் திணிக்கப் படுகின்றன. உதாரணத்திற்கு ஒன்று:- கடற்பாசி வளர்ப்புத் திட்டம் என்பது மிக மோசமான உயிரியல் ஊடுருவலாகும். இதுபோல பன்நாட்டு நிறுவனங்களால் எமது தேசத்துக்குள் "ஏழைப்பட்ட சனங்களுக்கான பொருளாதார வருமானம், அபிவிருத்தி" என்ற பெயரால், பசப்பு வார்த்தைகளால் இனிப்புத் தடவப்பட்ட பல நாசகார உயிரியல் ஊடுருவல்த் திட்டங்கள் எமது நாட்டுக்குள் NGO அமைப்புகளின் வழியாக, அரசின் அனுசூலத்துடன் நிறைவேற்றப் பட்டு வருகின்றது. தவிரவும், கடல்வளங்களையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கோடும், புரிதலோடும் அரசு "இழுவைப்படகு, இறால்கூடு, கணவாய்க்குழை, இரவுகளில் வெளிச்சம் பாய்ச்சி அட்டை பிடித்தல், டைனமைட் போட்டு மீன் பிடித்தல்" போன்ற சில தொழில் முறைகளைத் தடை செய்திருந்தாலும்கூட, அவ்வகைத் தொழில்கள் நடக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக இதில் அநேகம் தொழில்முறைகள் வெளிநாட்டு ஏற்றுமதிக்கான அறுவடைகளை நோக்காகக் கொண்டவையாகும்.

இவை எல்லாவற்றுக்கும் ஒரு மிகப் பெரிய தீர்வு ஏற்பட்டதாக, இன்றைய கடற்தொழில் அமைச்சின் முன்னெடுப்பில் கடலட்டை வளர்ப்பு போன்ற பண்ணைமுறை அபிவிருத்தி பொருளாதாரத் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் ஏற்படுத்தப் பட்டு வருகின்றது. இந்தத் திட்டங்கள் எமது மக்களுக்கும், தேசத்துக்கும் இன்று மிகவும் பெரும் நன்மைகளைத் தரவல்லன. அதில் மாற்றுக்கருத்துக்கள் இருக்க முடியாது. மேற்படி, இத்தகைய பண்ணைமுறைத் திட்டங்களை நாம் வரவேற்கின்றோம். கடற்தொழில் அமைச்சு மிகவும் நிதானத்தோடும், திட்டவட்டமான முறையிலும்தான் இதனை நடைமுறைப் படுத்த விரும்புகின்றது என்பதை அமைச்சர் தொடர்ந்து பல ஊடகங்கள் மூலியமாக முன்வைத்து வருவதை நாம் காண்கிறோம்.

அதில் முக்கியமாக அவர் மீண்டும் மீண்டும் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுவது என்னவென்றால்
"பாரம்பரிய தொழில்முறை மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலோ, சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதகம் ஏற்படும் வகையிலோ இந்தப் பண்ணைகள் செயற்படுத்தப்பட மாட்டாது" என்பதாகும்.
ஆனால், கடற்தொழில் அமைச்சின் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுபவர்களாக இருப்பவர்களோ அமைச்சின் கூற்றுக்கு நேரெதிரான செய்யற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாகவே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.
இந்த விடையத்தில் கடற்தொழில் அமைச்சு அதிக கவனம் செலுத்தி, அபிவிருத்தித் திட்டங்களைப் பொருத்தமான இடங்களில் செயற்படுத்துவதே சரியானதாகும்.

---

**பேண்தகு அபிவிருத்தித் திட்டம்**

"உள்ளூர் அறிவு என்பது, உள்ளூர் சமூகம் ஒன்று தனது நீண்ட கால சரித்திரத்திலும், அனுபவத்திலும் இயற்கையுடன் இடைத்தொடர்புற்று பெற்று, சேகரித்து விருத்தி செய்துகொண்ட புரிதல்கள், திறன்கள், தத்துவங்கள் என யுனஸ்கோ வரையறுக்கின்றது.
இயற்கை பாதுகாப்பு, உணவு உற்பத்தி, காடுருவாக்கம், மருத்துவம், பேண்தகு நில, நீர் வளபாவனை முகாமைத்துவம், சூழல்சுற்றுலா, காலநிலை மாற்றம், அனர்த்தங்களை குறைத்தல், கல்வி போன்ற பல்வேறு துறைகளில் உள்ளூர் அறிவுச் செயற்பாடானது முக்கிய பங்காற்றுகின்றது.
ஒரு சமூகத்தின் உள்ளூர் அறிவானது, அச் சமூகத்திற்காக நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் எல்லாத் திட்டங்களின் முடிவெடுக்கும் அல்லது தீர்மானமெடுக்கும் நிலைகளில் உபயோகிக்கப்பட வேண்டும்.
அத்துடன் மேற்கத்தைய அறிவுசார் அபிவிருத்தித் திட்டங்களினால் உருவாகும் பாதகங்களைக் களைவதற்கும், உள்ளூர் அறிவுப் பொறிமுறை அதனுடன் சேர்ந்து உபயோகித்தல் ஒரு சிறந்த முறையாகவும் கருதப்படுகின்றது.
எனவே யாதாவது அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு முன் அந்தத் திட்டங்களினால் நன்மையடைய அல்லது பாதிப்படையப்போகும் சமூகங்களின் பங்குபற்றுதலுடன் செய்யப்பட வேண்டும்.
எல்லா அவத்தைகளிலும் (திட்டமிடுதலிலிருந்து, இறுதிமுடிவெடுக்கும் வரை) சமூகங்களின் பங்குகேற்பு இருப்பது உறுதி செய்யப்படவேண்டும்.
அவ்வாறு இருந்தால்தான் அந்தத் திட்டம் பேண்தகு அபிவிருத்தி திட்டமாக நிலைத்திருக்கும்."
நன்றி:
-ஏ.எம். றியாஸ் அகமட் (அம்ரிதா ஏயெம்)
(சிரேஸ்ட விரிவுரையாளர், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்)-


# சீமைப் பனை

## அல்லது

# சீனிப்பனை

*மட்டக்களப்பின் மரபுரிமை*

-ஏ.எம். றியாஸ் அகமட் (அம்ரிதா ஏயெம்)
(சிரேஸ்ட விரிவுரையாளர், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்)



**மரபு:**

*மரபு என்பது ஒரு குறிப்பிட்ட குழு அல்லது இனம் அல்லது வகை ஒன்றின் வழியில் தலைமுறைகள் பல தாண்டி தொடர்ச்சியாய் வரும் ஒரு மக்கட்தொகுதி அல்லது பண்பாடு அல்லது சிறப்பு பழக்கவழக்கம் அல்லது நடைமுறை அல்லது பயிற்சிமுறை அல்லது முறையமை அல்லது வாழையடி வாழையாய் தொடரும் சிறப்பு என வரையறுக்கலாம்.*

*"நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற குறிப்பிடத்தக்க இயற்கை சார்ந்த அல்லது உயிரியல் சார்ந்த பூகோளம், நன்னீர், கரையோர மற்றும் கடல்சார் இயற்கை முறைமைகள் மற்றும் தாவரங்கள் மற்றும் விலங்குகள் சமூகம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மிகச்சிறந்த உதாரணங்கள்" என்பது தொட்டுணரக்கூடிய கலாசார மரபுரிமைகளில் அளவீடுகளில் ஒன்றாகும்.*

**சீமைப் பனை அல்லது சீனிப்பனை:**

Hyphaene thebaica *என்ற விஞ்ஞானப் பெயர்கொண்ட* (doum palm *அல்லது* gingerbread tree *என்ற பொதுப்பெயர் கொண்டது. அறபியில் தௌம் என அழைக்கப்படுகின்றது) சீமைப்பனை அல்லது சீனிப்பனையானது சாப்பிடக்கூடிய பழங்களை உருவாக்கும் அறேபிய தீபகர்ப்பத்தை பூர்வீகமாகவும், (ஆபிரிக்காவின் வடபகுதியின் அரைப்பகுதியிலும், மேற்குப் பகுதியிலும்) காணப்படும், அரிக்காசியே குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 60 அடி வரை வளரும், மூன்று அடி சுற்றளவுள்ள தண்டிலிருந்து, இரு கவராக கிளைக்கும், ஒப்பமான பட்டையுள்ள, 4 - 6 அடி நீளமுள்ள விசிறி போன்ற இலைகளைக் கொண்ட, ஆண், பெண் மரங்களில் 4 அடிகள் நீளத்தில் வெவ்வேறான பூந்துணர்கள் காணப்படும் வெவ்வேறான ஈரில்ல தாவரமாகும். பெண் தாவரங்களில் ஒரு விதை கொண்ட பெரிய பழங்கள் காணப்படும். சாதாரண நமது மற்றைய பனையில் ஒரு பழத்தில் மூன்று விதைகள் காணப்படும்.*

*இந்தப் பனைகள் மட்டக்களப்பில், வெளிநாட்டிலிருந்து வந்திருக்க வேண்டும் என்ற காரணத்தால் சீமைப் பனைகள் என்றும், அதிக இனிப்பாக இருப்பதால் சீனிப்பனைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.*

*மட்டக்களப்பிற்கு எவ்வாறு இந்த மரங்கள் வந்து சேர்ந்தன என்பது பற்றி பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த மரங்களின் விதைகள் அவைகளின் பூர்வீகமான அறேபிய பிரதேசங்களிலிருந்து கடல் மூலம் அடித்து வரப்பட்டு வளர்ந்திருக்கலாம் என்பது முதலாவது கருத்தாகும். போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சியாளர்களால் மட்டக்களப்பில் அறிமுகம் செய்யப்பட்டிருக்கலாம் என்பதும் ஆங்கிலேயர்களால் அறிமுகம் செய்யப்பட்டிருக்கலாம் என்பதும் இரண்டாவது மூன்றாவது கருத்துக்களாகும்.*
*சாதாரண பனை தருகின்ற அனைத்து பயன்களையும், இந்தப் பனையிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.*

*இந்த மரத்தின் விதைகள் கொண்டுள்ள தடித்த வித்துறைகள் நீரையும், ஒட்சிசனையும் உட்செல்வதைத் தடுப்பதன் காரணமாகவும், பௌதீக தடைகள் காரணமாகவும் முளையங்களின் வளர்ச்சியை தடுக்கின்றன. இந்த வித்துக்களை முளைக்கச் செய்வதற்கு பரிகரிப்பு தேவைப்படுகின்றது. அதன் தடித்த வித்துறையை கவனமாக அகற்றும்போது 80 சதவீதத்துக்கு மேலான வித்துக்கள் முளைக்கின்றன. நீரில் ஊறவைத்து நடும்போதும் வித்துக்களின் முளைதிறன்கள் அதிகரிக்கின்றன. அத்துடன் புது விதைகளை விட ஒரு வருட பழமையான விதைகளிலேயே முளைதிறன் அதிகமாக காணப்படும். ஜிபரெலிக் அமிலம் அல்லது எதிலீன் பாவிக்கும்போதும் முளைதிறன் அதிகரிக்கின்றன.*

*மட்டக்களப்பிலும் முயன்று தவறிக் கற்ற பல்வேறு முறைகளில் முளைக்கச் செய்கிறார்கள். இந்த முறைகள் அனைத்தும் வினைத்திறன் குறைந்தவை. நீரில் ஊறவைத்தும், நீரிலும், மாட்டு சிறுநீரிலும் ஊறவைத்து, மற்றும் சேதனப் பசளையுடன் பரிகரித்து என்று பல்வேறு முறைகளில் செய்கிறார்கள். அத்துடன் நேரடியாக மழைகாலங்களில் நடப்பட்ட வித்துக்களும் முளைத்திருக்கின்றன. அவைகளும் குறிப்பிட்ட அளவில் வெற்றி அடைந்து, மட்டக்களப்புக்கு அப்பால் இந்த மரங்களின் பரம்பலுக்கு வித்திட்டிருக்கின்றன.*

*குறிப்பிட்ட காலங்களுக்கு முன் நெடுந்தீவிலும், தற்போது வடமராட்சி கிழக்கு வல்லிபுரம் (3- 4 மரங்கள்) பகுதியிலும், மன்னார் வட்டக்கண்டல் பகுதியிலும், மட்டக்களப்பு விளாவெட்டுவான் பகுதியிலும் இந்த மரங்கள் காணப்பட்டாலும், இன்னும் பல்வேறு இடங்களில் நடப்பட்டாலும், நூற்றாண்டுகளாக இரு நூற்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் மட்டக்களப்பு புளியந்தீவு முற்றவெளி பகுதியின் வெபர் மைதானம், கோட்டை, வின்சன்ட் கல்லூரி, மெதடிஸ்ட் கல்லூரி, தபால் நிலையம், காந்தி பூங்கா போன்ற பகுதிகளில் காணப்படுகின்ற இந்த மரங்கள் மட்டக்களப்பு நகரப் பிரதேசத்தின் அடையாளமாகும். திருகோணமலைக்கு அதன் சுயாதீனமாக அலைந்து திரிகின்ற மான் கூட்டங்கள் எவ்வாறு மரபுரிமையோ, இந்த மரங்களும் மட்டக்களப்பின் மரபுரிமையாகும். இவை பாதுகாக்கப்பட வேண்டியவைகளாகும்.*

*அரசியல்ரீதியாக அல்லது கலாச்சார ரீதியாக யாழ்ப்பாணத்தை (கிளைவிடாத பனை), மட்டக்களப்பிலிருந்து பிரித்துக் காட்டுவதற்கு கிளைவிட்ட பனை குறியீடாகவும் ஒரு சாராரால் முன்வைக்கப்படுகின்றது.*

*கடந்த காலத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டாலும், மின்சார சபை வெட்டுதல், சபைகள் வெட்டுதல், அனுமதிபெறாத விளம்பரப் பலகை ஆணி அடித்து கொழுவுதல், பனைகளின் தண்டுகளுக்கு பல்வேறு நிறங்கள் அடித்தல், தன்னிச்சையான வெட்டுதல்கள், எரித்தல்கள் போன்றவை இந்த மரங்களின் இருப்புகளுக்கு பாரிய சவாலாக இருக்கின்றன.*

*முன்னொரு காலத்தில் நீதிமன்றத்தினால் நடப்படக்கூடாது என்ற கட்டளையிடப்பட்ட இந்த மரமானது (ஒருவேளை வெளிநாட்டு மரம் என்ற காரணத்தினால் இருக்கலாம்), இன்றும் மட்டக்களப்பின் அடையாளமாகவும், மரபுரிமையாகவும் இருப்பது வரலாற்றின் முரண்நகையாகும்.*

# தீர்ந்து போகாத முத்தங்களின் பேரின்பம்

-நேதா-

உச்சி வெய்யிலில் நிலம் கொதிக்கும் பொழுதில்
கற்பனைக் கதையில் வரும் தேவதை போல்
நிஜமாகவே என்னைக் காணவந்தாய்
எப்போதும் என்னைக் காணவருவதை
சொல்லிவிட்டே வந்திருக்கின்றாய்

இன்று ஒரு இரகசியம் போல,
நள்ளிரவில் பெய்த மழை போல நீ வந்தாய் என்னிடம்
என்னைக் காண்பதில் உனக்கு அலாதிப் பிரியம்
எனக்கும்தான்

நீ வந்தது என்னவோ வெறும் கையோடுதான்
ஆனால் போகும் போது
கணக்கிலடங்காத முத்தங்களால் என்னை நிரப்பிவிட்டுப்போனாய்
நீ முத்தங்கள் வைத்த இடங்கள்
வாசனையோடு நிரம்பி வழிகின்றது

உன் முத்தங்களை நான் பாதுகாக்க வேண்டும்
எனது கவலைகள் நெருங்காமல்,
என் கண்ணீரில் மூழ்கி விடாமல்
என் வார்த்தையின் சப்தத்தில் பயந்து விடாமல் பாதுகாக்க வேண்டும்
இன்னும் பல பொழுதுகள் என்னை நீ காணவருவாய்
பதற்றத்தோடும், வெக்கத்தோடும்
இன்னும் நிறைய முத்தங்கள் தருவாய்.
அவை எல்லாம் இன்று நீ வைத்துப்போன
முத்தங்கள் மேல்த்தான் வசிக்கப் போகின்றன

வைகறையில் பூத்த வாசம் தொலையாத பூக்கள் போல ,
கோபப்படத் தெரியாத பச்சைக் குழந்தையின் புன்னகை போல,
வெள்ளைத்தாளின்மேல் எழுதப்பட்ட
முத்தம் பற்றிய கவிதை போல,

எப்போதும் காலாவதியாகிப் போகாத ஸ்பரிசங்களை,
உன் எச்சிலால் எழுதிவிட்டுப்போன இரசனைக் குறிப்புக்களை,
உன் உதடு மிதித்த தடங்கள் பூத்த பொழுதுகளை,

தேவதையின் வாசனையும்,
பிரியத்தின் இராட்சசியாய் உன் அன்புக்கு
என்னை இரையாக்கிக் கொண்ட பொழுதுகள்


சுவாசப்பைக்குள் சூரிய வெப்பமும்,
இதயத்துக்குள் மாசி மாதத்து பௌர்ணமிக் குளிருமாய்
எனக்குள் என் புலன்கள் ருத்திர தாண்டவமாடியது

நமது நிகழ்காலம் முத்தங்களின்
ஏகாதிபத்தியத்தோடு நகர்கின்றது
சாகத்தெரியாத முத்தங்களால்தான்
காதல் சாகாமல் வாழ்கின்றது.



# சிறுவர்களின் கிறுக்கல்கள்...

Jenita Shanker
små barns pedagog (toddler educator)



Tilfeldig og kontrollert bevegelse          Bilde: Ella - 2½år

மழலைகளின் ஆரம்ப வரைபடங்கள் தற்செயலான கை அசைவுகளைக் கொண்டதாக இருந்தாலும், அவை மிகவும் அர்த்தமுள்ள அசைவுகளாக ஆராய்ச்சியாளர்களால் கருதப்படுகிறது.

தற்செயலாக வரையப்படும் கோடுகள், படிப்படியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுகிறது. பின்பு அக்குழந்தைகள் எதனை வரைகிறார்கள் என்று பெயரிடத் தொடங்குகின்றனர். உதாரணமாக ஒரு சிறிய வட்டத்தை வரைய முயற்சி செய்து வரைந்துவிட்டு அதனை "அம்மா" "அப்பா" என்று பெயரிடுக்கின்றனர். அடுத்தபடியாக அவர்கள் படத்தை வரையத் தொடங்குமுன் தாங்கள் எதனை வரையப் போகிறார்கள் என்பதைச் சொல்லுவார்கள். இந்நிலை அவர்கள் தாம் வரைய விரும்பும் படத்தின் உருவத்தை முதலிலேயே உள்வாங்கியுள்ளனர் என்பதைக் குறிக்கின்றது.


சிறுபிள்ளைகளின் வரைபடங்கள் தற்செயலான அசைவுகளைக் கொண்ட கோடுகளாக இருந்தாலும், பெற்றோர் அவர்களை ஊக்குவிப்பது மிகவும் அவசியம். அப்போதுதான் அவர்கள் வரைபடங்கள் ஊடாக உரையாடுவதும் ஏற்றுக்கொள்ளப் படுகிறது என்பதை உணர முடியும்.
பெற்றோர் பிள்ளைகளுக்குப் பெரிய வரைதல் தாள்கள், பல வர்ண பென்சில்கள் போன்ற வரைதல் உபகரணங்களை அவர்கள் கண்களில் தென்படக்கூடிய இடங்களில் வைப்பது மிகவும் நல்லது.



Kontrollerte bevegelse          Bilde: kiara 2½ år

அப்போது தான் தமக்குத் தோன்றுவதை வரைதல் மூலம் வெளிப்படுத்துவர். அவர்களது முதல் மொழி வரைத்தலேயாகும்.


குழந்தைகள் ஆரம்பத்தில் பென்சில் பிடித்து வரையும் கோடுகள், புள்ளிகள், வட்டங்கள் போன்றனவே பின்னர் அவர்கள் சிறந்த முறையில் எழுத்துக்களை எழுதுவதற்கு அடிப்படையாகவும், உதவியாகவும் அமையும். பெற்றோர்களே குழந்தைகளை ஊக்குவியுங்கள் அவை அவர்களின் சிந்தனைத் திறனை வளர்க்க பெரிதும் உதவும்.



Tilfeldig bevegelse Bilde: Daniel -1½år

**மழலைகளின் வரைதல் ஆர்வத்தினை ஊக்குவிப்பதற்கு சில உதவிக் குறிப்புகள்:**

• பிள்ளைகள் வரைவதற்கு பெரிய தாள்களையும், வண்ணப் பென்சில்களையும் அவர்கள் பார்வையில் படும் வண்ணம் வையுங்கள்.
• அவர்களுக்கு பெரிய பென்சில்களைக் கொடுங்கள். அவை தான் விரல்களால் சுற்றிப்பிடிப்பதற்கு இலகுவாக இருக்கும்.
• நச்சுத் தன்மையற்ற வண்ணப் பென்சில்களைப் பிள்ளைகளுக்கு கொடுங்கள். அவர்கள் அதனை தமது வாயால் கடித்தாலும், ஆபத்து இராது.
• பிள்ளைகள் வரையும்போது அவர்களுடன் உரையாடுங்கள். அவர்கள் எந்த நிறத்தைப் பாவிக்கிறார்கள் என்பது பற்றி உரையாடுங்கள். அந்த நிறம் அங்கு வேறு எதில் எல்லாம் இருக்கிறது என்பதைப்பற்றி உரையாடுங்கள். இது பிள்ளைகளின் பேச்சுத் திறனையும், அறிவுத் திறனையும் வளர்க்கும்.



En blanding av tilfeldig rabling og kontrollert bevegelse. Bilde: Dennis 2år

• அவர்கள் வரையும்போது, வரையும் படம் பற்றி அல்லது வரைந்த படத்தைப் பற்றி அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை சிறு குறிப்புகளாக வரைபடத்தில் எழுதி வையுங்கள்.

• அவர்கள் பெரியவர்களான பிறகு அவைகளை வாசிக்கும்போது அவர்களுக்கு சிறுபராயத்தினை நினைவுபடுத்தும். அவை அவர்களுக்கே வேடிக்கையாகவும் இருக்கும்.

• வரைபடங்களில் சிலவற்றை "Frame" பண்ணி, அவற்றில் சிலவற்றை வீட்டு சுவர்களில் தொங்க விடுங்கள். இது பிள்ளைகளுக்கு மிகப்பெரிய ஊக்கமளிக்கும்.

• பிள்ளைகளின் வரைபடங்கள் விலை மதிக்க முடியாதவை. அவற்றை உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு பரிசில்களாக வழங்குவது வரவேற்கத்தக்கது.